MINISTRY OF HEALTH
SINGAPORE
சிறப்புத் தொகுப்பை
வழங்குவோர்

# குறைந்த செலவில் மன நிம்மதி

**மெடிசேவ் கணக்கோடு மெடிஷீல்டு அல்லது ஒருங்கிணைந்த ஷீல்டு திட்டமும் இருந்தால், உங்களது சுகாதாரப் பராமரிப்புக் கட்டணங்கள் கட்டுப்படியாக உதவும்.**



**திருவாட்டி இங்கின் மருத்துவமனை கட்டணம்**

| | |
|---|---|
| மொத்த கட்டணம் | $17,149.18 |
| தங்கியிருந்த காலம் (வகுப்பு "சி" படுக்கை) | 8 நாட்கள் |
| அரசாங்கத் தள்ளுபடி | $10,901.37 |
| **தள்ளுபடிக்குப் பிறகு மொத்த கட்டணம்** | **$6,247.81** |
| மெடிஷீல்டு கட்டிய தொகை | $4,423.03 |
| மெடிசேவில் எடுத்த தொகை | $1,824.78 |
| **ரொக்கமாகச் செலுத்திய தொகை** | **$0.00** |

**செரில் டான்**

அரசாங்கத் தள்ளுபடி, மெடிசேவ் ஆகியவற்றுக்குப் பிறகு, பொதுச் சுகாதார நிதியளிப்புத் திட்டத்தின்கீழ் மூன்றாம்கட்டப் பாதுகாப்பாக மெடிஷீல்டு திட்டமும் இருப்பது பயனுள்ளது. குறிப்பாக, கடுமையான அல்லது நீண்டகால நோயால் அவதிப்படும்போது.

திருவாட்டி இங், முழங்கால்கள் தாங்காமல் ஒருநாள் வீட்டில் விழுந்து, சிங்கப்பூர் பொது மருத்துவ மனையின் வகுப்பு சி படுக்கையில் எட்டு நாட்கள் தங்கியிருந்தபோது இந்த உண்மையை உணர்ந்தார்.

நெடுங்காலமாக முழங்கால் வலியால் அவதிப்பட்டுவந்த திருவாட்டி இங், உடல்நலக்குறைவால் ஓய்வுபெறுவதற்குமுன் துப்புரவுப் பணியாளராக வேலை செய்திருந்ததால் அவரிடம் ஏற்கனவே மெடிசேவ் கணக்கு இருந்தது. தனது மெடிசேவ் கணக்கைப் பயன்படுத்தி அவர் மெடிஷீல்டு திட்டமும் வாங்கியிருந்தார்.

முழங்கால் மாற்றும் அறுவை சிகிச்சைக்கும் மருத்துவமனையில் தங்கியதற்கும் அவரது மொத்தக் கட்டணம் $17,000. அரசாங்கத் தள்ளுபடியுடன் கட்டணம் $6,200க்குக் குறைந்தது.

எஞ்சிய தொகையில் பெரும்பகுதியைத் திருவாட்டி இங்கின் மெடிஷீல்டு கணக்கு அடைத்துவிட்டதால், மெடிசேவ் கணக்கிலிருந்து செலுத்துவதற்கு வெறும் $1,800 மட்டுமே மீதமிருந்தது. இதனால் கைக்காசாக ரொக்கம் செலுத்தவேண்டிய நிலையிலிருந்து அவர் தப்பினார்.

கணவரை இழந்த 65 வயது திருவாட்டி இங், ஓரறை வீட்டில் தனியாக வாழ்கிறார். மெடிஷீல்டு பற்றி ஆரம்பத்தில் அவருக்கிருந்த தவறான எண்ணங்களை இச்சம்பவம் போக்கியது.

திருவாட்டி இங் 61 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டோர் பிரிவில் இருப்பதால், அவரது மாதப் பிரிமியம் $27க்கும் குறைவு.

"ஆண்டுக்கு அதிகம் செலவாகாது என்று என் நண்பர்கள் எனக்கு அறிவுரை சொன்னார்கள். அவர்கள் சொன்னபடி செய்ததில் இப்போது மகிழ்ச்சியடை கிறேன்" என்றார் திருவாட்டி இங்.

**வெவ்வேறு படுக்கைப்பிரிவுகளுக்கு வெவ்வேறு திட்டங்கள்:**

காலில் எலும்பு தேய்வால் பாதிக்கப்பட்டிருந்த 53 வயது திருவாட்டி கோ, டான் டோக் செங் மருத்துவமனையின் வகுப்பு ஏ படுக்கையில் ஆறு நாட்கள் தங்கியதற்கான கட்டணம் $14,600.

தள்ளுபடி இல்லாத படுக்கைப்பிரிவில் தங்கியதால் அரசாங்க மானியத்திற்கு அவர் தகுதி பெறாவிட்டாலும், திருவாட்டி கோவின் ஒருங்கிணைந்த ஷீல்டு திட்டம் மொத்தக் கட்டணத்தில் $10,400 கட்டியது. எஞ்சிய தொகையில் பெரும்பகுதி அவரது கணவரின் மெடிசேவ் கணக்கிலிருந்து கட்டப்பட்டது. அவர் செலுத்திய கைக்காசு வெறும் $85.30 தான்.

"எனது மருத்துவக் கட்டணத்தைப் பற்றி நான் வருந்தவே இல்லை. ஏனெனில், எனது மருத்துவக் காப்புறுதி போதிய பாதுகாப்பளிக்கும் என்று எனக்குத் தெரியும்" என்றார் திருவாட்டி கோ.

"உங்களுக்கு எது கட்டுப்படியாகும் என்பதைத் தெரிந்துகொண்டு, நல்ல காப்புறுதித் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

"நன்கு திட்டமிட்டு, ஒன்றுடன் ஒன்று ஒத்தில்லாத திட்டங்களை வாங்கவேண்டும். அப்போதுதான் நீங்கள் விரும்பும் படுக்கைப்பிரிவுக்குச் சரியான மருத்துவக் காப்பு கிடைக்கும்.

## கட்டுப்படியாகும் சுகாதாரப் பராமரிப்பு

**மெடிசேவ்** என்பது கட்டாய தனிநபர் மருத்துவச் சேமிப்புக் கணக்குத் திட்டமாகும். சிங்கப்பூரர்கள் சிரமமின்றி மருத்துவ சிகிச்சைக்குப் பணம் கட்ட இத்திட்டம் உதவுகிறது. மருத்துவமனையில் தங்கும் செலவு, பகல்நேர அறுவை சிகிச்சைகள், குறிப்பிட்ட சில வெளிநோயாளி சிகிச்சைகள் ஆகியவற்றுக்கு இதைப் பயன்படுத்தலாம்.

**மெடிஷீல்டு** என்பது கடுமையான நோய்களுக்கான குறைந்த செலவிலான காப்புறுதித் திட்டமாகும். கடுமையான நோய்கள் அல்லது மருத்துவமனையில் நீண்டகாலம் தங்குதல் ஆகிய மருத்துவச் செலவு களைச் சிங்கப்பூரர்கள் சமாளிக்க இத்திட்டம் உதவு கிறது. மெடிஷீல்டு திட்டத்தின் பிரிமியத்தைக் கட்ட மெடிசேவ் சேமிப்பைப் பயன்படுத்தலாம். மெடிஷீல்டு திட்டம் வகுப்பு பி2 மற்றும் சி படுக்கைகளில் தங்குவோருக்கானது என்றாலும், பொது மருத்துவ மனைகளில் அல்லது தனியார் மருத்துவமனைகளில் வகுப்பு ஏ மற்றும் பி1 படுக்கைகளில் தங்க விரும்பும் சிங்கப்பூரர்கள், தனியார் காப்புறுதி நிறுவனங்கள் வழங்கும் ஒருங்கிணைந்த ஷீல்டு திட்டங்களில் சேரலாம்.

**மெடிஃபண்டு** என்பது மருத்துவச் செலவுகளைக் கட்ட இயலாத வசதி குறைந்த சிங்கப்பூரர்களுக்கு உதவிட அரசாங்கம் அமைத்திருக்கும் அறக்கட்டளை நிதி யாகும். அரசாங்கத் தள்ளுபடிகள், மெடிசேவ், மெடி ஷீல்டு ஆகிய அனைத்துக்கும் பிறகும் கட்டணத்தைக் கட்டச் சிரமப்படும் வசதி குறைந்த சிங்கப்பூரர்களுக்கு உதவும் இறுதிக்கட்ட பாதுகாப்பு வலையாக மெடிஃபண்டு உதவுகிறது.

**மேல்விவரங்களுக்கு www.moh.gov.sg பார்க்கவும்.**

## உங்கள் கவனத்திற்கு ஐந்து விவரங்கள்

✓ **வெவ்வேறு திட்டங்களைப் புரிந்துகொள்ளுங்கள்.**
நல்லதொரு காப்புறுதித் திட்டம் உங்களுக்குப் போதிய பாதுகாப்பை அளிக்கும். உங்கள் தேவைகளுக்குப் பொருத்தமான திட்டத்தை வாங்குங்கள். அதிகமே நல்லது என்று பொருட்படாது.

✓ **உங்களுக்கு எது கட்டுப்படியாகும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.**
உங்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய காப்புறுதித் திட்டத்தில் சேருங்கள். அப்போதுதான் நீண்டகாலம் திட்டத்தில் நிலைத்திருக்கமுடியும்.

✓ **மெடிசேவ் சந்தா செலுத்தி, அதைக் கவனமாகப் பயன்படுத்துங்கள்.**
வழக்கமான அடிப்படையில் சிறு சந்தாக்கள் செலுத்துவதால் உங்கள் மெடிசேவ் சேமிப்பு பெருகும். உங்களுக்கும் உங்கள் அன்புக் குரியவர்களுக்கும் அடிக்கடி பணம் நிரப்புங்கள்.

✓ **சரியான படுக்கைப்பிரிவைத் தெர்ந்தெடுங்கள்.**
வகுப்பு ஏ/பி1 அல்லது வகுப்பு பி2/சி என எதுவாக இருந்தாலும், உங்கள் வசதிக்கு உட்பட்ட வகுப்பைத் தேர்ந்தெடுங்கள்.

✓ **இளவயதில் வாங்குங்கள்.**
நீங்கள் ஆரோக்கியமாக இருக்கும் இளவயதிலேயே காப்புறுதித் திட்டம் வாங்கி, அதில் நிலைத்திருப்பது முக்கியம். அப்போதுதான், பிற்காலத்தில் விலக்கல்களை எதிர்நோக்க நேரிடாது.